பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 25 | சனிக்கிழமை | 09.05.2026 | அதிர்வு 282

### கபில சந்திரசேனவின் மரணம்:
## விசாரணை அதிகாரிகள் மீது நாமல் சரமாரி குற்றச்சாட்டு!



ஸ்ரீலங்கன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாகஅதிகாரிகபிலசந்திர சேனவின் மரணத்துக்கு முன்னர், 06▶



# ஜூனில் மீண்டும் ரணில்! அரசியல் களம் அதிரும்!!

## ஹரின் பெர்னாண்டோ அதிரடி அறிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை எதிர்வரும் ஜூன் மாதம் மீண்டும் தீவிர அரசியலுக்குக் கொண்டு வரவுள்ளதாகவும், அதன் பின்னர் நாட்டின் அரசியல் களத்தில் பாரிய திருப்பங்கள் ஏற்படும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார். 06▶

# ரூ. 30 இலட்சம் இலஞ்சம் வாங்கிய குருநாகல் பிரதி மேயர் சிக்கினார்

## தேசிய மக்கள் சக்தி நிர்வாகத்தில் அழுக்கான ஊழல்

குருநாகல் மாநகர சபையின் பிரதி மேயர், 30 இலட்சம் ரூபா பணத்தை இலஞ்சமாகப் பெற்றுக்கொள்ள முயன்றபோது, பத்தரமுல்லைப் பகுதியில் வைத்து இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் பஸ் நிலையத்தைத் துப்புரவு செய்தல் மற்றும் அங்குள்ள பொது மலசலக்கூடங்களைப் பராமரிப்பதற்கான டெண்டரை வழங்குவதற்காகவே இவர் இந்த இலஞ்சத்தைக் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த டெண்டரை ஒருவருக்குப் பெற்றுக் கொடுப்பதற்காக முதற்கட்டமாக 06▶






தேசிய மக்கள் சக்தி அரசின் காலத்தில் இடம்பெறும் நிர்வாகத் தவறுகள், குற்றங்கள் பற்றிய விடயங்கள் அவை நடைபெற்ற சமயத்தில் வெளிவருவதில்லை. ஏனோ மூடி மறைக்கப்பட்டு விடுகின்றன. அதுவே பின்னர் விடயங்கள் அம்பலமாகும் போது, அப்படி விவகாரம் அமுக்கி, மறைக்கப்பட்டமைக்கு ஆளும் தரப்புத்தான் காரணம் என்ற ஒரு சந்தேகம் எழக் காரணமாகி விடுகின்றது.

25 லட்சம் டொலர் கடன் மீளளிப்பு நிதி திறைசேரியில் இருந்து தவறான வங்கிக் கணக்குக்குச் சென்ற விடயத்தில், அது நடந்து பல மாதங்கள் விவகாரம் மூடி மறைக்கப்பட்டிருந்த நிலையில், பின்னர்தான் சுயாதீன சட்டத்தரணிகள் பேரவையின் முறைப்பாட்டினால் அம்பலமானது. அப்படி மூடி மறைக்கப்பட்டமை அந்தத் தவறில் அரசுத் தரப்புக்கு தொடர்பு அல்லது குற்றப் பொறுப்பு இருக்கின்றது என்ற வலுவான சந்தேகத்தைத் தரக் காரணமாகிவிட்டது.

அதேபோன்றுதான் பல 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally




# செம்மணியில் 260 ஆக உயர்ந்தது மனித எச்சங்களின் எண்ணிக்கை

## புதிதாக சிறுவன் ஒருவனின் என்புக்கூடு நேற்று அடையாளம்

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் போது, நேற்று சிறுவன் ஒருவனுடையது எனச் சந்தேகிக்கப்படும் மனித என்புத் தொகுதி ஒன்று புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் மூலம் அங்கு இதுவரை அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களின் மொத்த எண்ணிக்கை 260 ஆக உயர்வடைந்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 11ஆம் நாள் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றன. இதன் போது, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த என்புத் தொகுதிகளில் இருந்து இரண்டு முழுமையான மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்று மற்றும் இரண்டிலிருந்து இதுவரை மொத்தம் 260 மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் இருந்து 256 மனித என்புத் தொகுதிகள் இதுவரை முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடங்கிய கடந்த 11 நாள்களில் மட்டும் 17 மனித என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்று மதிய வேளையில் பெய்த கடும் மழை காரணமாக அகழ்வுப் பணிகளில் பெரும் சுணக்கம் ஏற்பட்டது. அகழ்வுக் குழிகளுக்குள் மழைநீர் தேங்கிய நிலையில், நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான கழிவுநீர் அகற்றும் பவுசர்கள் வரவழைக்கப்பட்டு, நீர் உறிஞ்சி வெளியேற்றப்பட்டது. அதன் பின்னரே மாலை வேளையில் பணிகள் தொடர்ந்தன.

இன்று சனிக்கிழமை என்பதால் அரை நாள் மட்டுமே அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. எனினும், மழையுடனான காலநிலை தொடருமானால் இன்றைய அகழ்வுப் பணிகள் பாதிக்கப்படக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

தசாப்தங்களாகப் புதைந்து கிடக்கும் செம்மணி மர்மங்கள், ஒவ்வொரு அகழ்வின் போதும் அதிர்ச்சியூட்டும் சாட்சியங்களை வெளிப்படுத்திக் கொண்டிருப்பது உறவினர்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.


















# நாடாளுமன்றத்தில் நேற்று வியட்நாம் ஜனாதிபதி உரை

## அணிவகுப்பு மரியாதையுடன் கௌரவிப்பு

வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி டோ லாம் நேற்று இலங்கை நாடாளுமன்றத்துக்கு விஜயம் மேற்கொண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க விசேட உரையை நிகழ்த்தினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகள் மற்றும் நாடாளுமன்ற ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அவர் இதன் போது முக்கியத்துவம் அளித்துப் பேசினார்.

நேற்று முற்பகல் 11.05 மணியளவில் நாடாளுமன்றத்தை வந்தடைந்த வியட்நாம் ஜனாதிபதியை, சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன மற்றும் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர ஆகியோர் வரவேற்றனர். படைக்கல சேவிதர் உள்ளிட்ட அதிகாரிகளின் அணிவகுப்பு மரியாதையுடன் அவர் நாடாளுமன்றக் கட்டடத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி டோ லாம் மற்றும் சபாநாயகர் ஆகியோருக்கு இடையில் உயர்மட்ட சந்திப்பொன்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் வியட்நாமின் முன்னாள் தலைவர் ஹோ சி மின் இலங்கைக்கு மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க விஜயத்தை சபாநாயகர் நன்றியுடன் நினைவுகூர்ந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் ஊடாகப் பரிமாற்றங்களை மேம்படுத்தி, இருதரப்புத் தொடர்புகளை வலுப்படுத்துவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

வியட்நாம் ஜனாதிபதி, சபாநாயகர் தலைமையிலான நாடாளுமன்றத் தூதுக் குழுவை வியட்நாமுக்கு வருமாறு

தொடர்ச்சி▼





# நாடாளுமன்றத்தில் நேற்று வியட்நாம் ஜனாதிபதி உரை

## அணிவகுப்பு மரியாதையுடன் கௌரவிப்பு

தொடர்ச்சி▲

அழைப்பு விடுத்தார்.

முற்பகல் 11.40 மணியளவில் சபா மண்டபத்தில் விசேட உரையாற்றிய ஜனாதிபதிபோலாம், வியட்நாமின் தற்போதைய அபிவிருத்திப் பயணம் மற்றும் நாடாளுமன்ற இராஜதந்திரத்தின் முக்கியத்துவம், நிலைபேறான அபிவிருத்தி, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் மக்கள் மையப்படுத்தப்பட்ட முன்னேற்றம் ஆகியவற்றில் இரு நாடுகளும் கொண்டுள்ள பகிரப்பட்ட அர்ப்பணிப்பு, இலங்கையின் அரசியல் நிலைத்தன்மை மற்றும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு வியட்நாமின் முழுமையான ஆதரவு ஆகிய விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

வியட்நாம் ஜனாதிபதியின் உரையைத் தொடர்ந்து, பிரதமர் (கலாநிதி) ஹரிணி அமரசூரிய மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் உரையாற்றித் தமது நன்றிகளைத் தெரிவித்தனர்.

இந்த விஜயத்தின் நினைவாக நாடாளுமன்ற விருந்தினர் புத்தகத்தில் ஜனாதிபதி டோ லாம் தனது குறிப்பை இட்டதுடன், பிற்பகல் 12.30 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்திலிருந்து புறப்பட்டார்.











# கபில சந்திரசேனவின் மர்ம மரணம் இலங்கை அரசியலில் இருண்ட பக்கம்

## திலித் ஜயவீர எம்.பி. கவலை





ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி கபில சந்திரசேனவின் மரணம், இலங்கையின் அரசியல் மற்றும் வர்த்தக கலாசாரத்தின் இருண்ட பக்கத்தைப் பிரதிபலிக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறினார்.

கபில சந்திரசேனவை ஸ்ரீலங்கா டெலிகொம் காலத்தில் இருந்தே தமக்குத் தெரியும் எனக் குறிப்பிட்ட திலித் ஜயவீர, "அவர் ஒரு திறமையான நிர்வாக அதிகாரி. ஆனால், துரதிர்ஷ்டவசமாக இந்த நாட்டின் அரசியல் மற்றும் வர்த்தகங்களுக்கு இடையிலான மறைமுகத் தொடர்புகளுக்குள் அவர் சிக்கிக்கொண்டார்" என்றும் தெரிவித்தார்.

கபில சந்திரசேன போலிப் பிணையாளர்களைப் பயன்படுத்தி பிணை பெற்றார் எனக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் அவருக்குப் பெரும் மன அழுத்தத்தைக் கொடுத்திருக்கும் என்றும் திலித் ஜயவீர சுட்டிக்காட்டினார்.

"இறுதியில் ஒரு மனிதன் தனிமைப்படுத்தப்படும் போது, அவரிடம் இருந்து நன்மைகளைப் பெற்ற எவருமே அவருக்கு ஆதரவாக நிற்பதில்லை. பிணை எடுப்பதற்குக்கூட ஒருவரை அவரால் தேடிக்கொள்ள முடியாமல் போனது ஒரு கசப்பான பாடம்" என்றும் அவர் விசனம் தெரிவித்தார்.

ஒருவர் மீதான குற்றம் நிரூபிக்கப்படும் முன்னரே, அவரை விளக்கமறியலில் வைப்பதையே தண்டனையாக மாற்றும் தற்போதைய சட்ட முறையை அவர் விமர்சித்தார்.

"குற்றம் நிரூபிக்கப்படும் வரை அனைவரும் நிரபராதிகளே" என்ற தார்மீகப் பண்பு இலங்கையின் தற்போதைய அமைப்பில் வலுவிழந்து வருகின்றது என்றும் அவர் சாடினார்.

கபில சந்திரசேனவின் மரணம் முதற்கட்டமாக தற்கொலை எனத் தெரிந்தாலும், அது குறித்து முறையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் திலித் ஜயவீர வலியுறுத்தினார்.

அண்மையில் உயிரிழந்த திறைசேரி அதிகாரி ரங்க ராஜபக்ஷவின் மரணம் போன்றே, இதிலும் பல மர்மங்கள் ஒளிந்திருக்கின்றன என்றும் அவர் சந்தேகம் வெளியிட்டார்.

அரசியல் அமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணும் அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு இது ஒரு எச்சரிக்கை மணி என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# நாட்டுக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவருகின்ற புலம்பெயர் ஊழியர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுமா?

## நாடாளுமன்றத்தில் நேற்று சாணக்கியன் எம்.பி. கேள்வி




நாட்டுக்கு அந்நிய செலாவணியைக் கொண்டுவருகின்ற புலம்பெயர் ஊழியர்களின் பிரச்சினைகளை நேற்று நாடாளுமன்றத்தில் எடுத்துரைத்த சாணக்கியன் எம்.பி. அவை தீர்க்கப்படுமா என்று கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற - புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சட்ட அதிகாரத்துடன் கூடிய தனிப்பட்ட அலகொன்றை நிறுவுதல் தொடர்பான தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய போது, வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்லும் இலங்கை மக்களின் துயரமான நிலைகள் குறித்து பல முக்கிய விடயங்களை அவர் எடுத்துரைத்தார்.

Aadujeevitham (தி கோட் லைஃப்) என்பது வெளிநாட்டு வேலைக்காக செல்லும் ஒரு இளைஞனின் துயரமான வாழ்க்கையை எடுத்துக்கூறும் உணர்ச்சிப்பூர்வமான திரைப்படமாகும். இதில் வெளிநாட்டு வேலைக்கு செல்பவர்களின் வாழ்கையில் நடக்கும் விடயங்கள் மிகத் தெளிவாக காட்டப்பட்டுள்ளன. அது போலத்தான் எம்மவர்களின் நிலைமையும் காணப்படுகின்றது.

இந்த நாட்டில் வாழ்வாதார சிக்கல்கள், பொருளாதார நெருக்கடிகள், வேலைவாய்ப்பு பற்றாக்குறை மற்றும் சமூக பாதுகாப்பின்மை போன்ற பல்வேறு இன்னல்களை எதிர்கொண்ட பின்னரே பெரும்பாலான இளைஞர், யுவதிகள் தங்கள் குடும்பங்களை விட்டு வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப்

பகுதிகளில் வாழும் மக்கள் மிகக் கடுமையான பொருளாதார சிரமங்களின் காரணமாகவே மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கு தொழிலுக்காகப் புலம்பெயர்கிறார்கள்.

'ஆடு ஜீவிதம்' எனும் திரைப்படம், தொழிலுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் இளைஞர்கள் மற்றும் யுவதிகள் எதிர்கொள்ளும் மனிதாபிமானமற்ற சூழல்கள், ஏமாற்றங்கள் மற்றும் துன்பங்களை மிகவும் உணர்ச்சிகரமாக சித்திரிக்கிறது. ஆனால் அது ஒரு திரைப்படக் கற்பனை மட்டும் அல்ல;

இலங்கையிலிருந்தும் வெளிநாடுகளுக்கு செல்லும் பல தொழிலாளர்கள் அத்தகைய கொடுமைகள் மற்றும் சிக்கல்களுக்கு உள்ளாகி வருகிறார்கள் என்பது மிகவும் வேதனையான உண்மையாகும்.

அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு பெரும்பாலும் பொருளாதார வசதியுள்ளவர்களே செல்லும் வாய்ப்பைப் பெறுகின்றனர். ஆனால் எமது நாட்டின் சாதாரண மக்கள், குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் வாழும் மக்கள், இந்த நாட்டில் வாழ முடியாத சூழ்நிலை உருவான பின்னரே தங்களது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வெளிநாடுகளுக்கு செல்ல

வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இவ்வாறு தொழிலுக்காக வெளிநாடு செல்லும் குடும்பங்களின் பெற்றோருக்கு வழங்கப்பட்டு வரும் “அஸ்வெசும” போன்ற சமூக நலத்திட்ட கொடுப்பனவுகள் கூட இரத்து செய்யப்படும் நிலை காணப்படுவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

எனவே, வெளிநாட்டு தொழிலாளர்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் சட்ட உதவிகளை உறுதிப்படுத்தும் வகையில் சட்ட அதிகாரத்துடன் கூடிய விசேட அலகொன்றை அரசாங்கம் அவசரமாக நிறுவ வேண்டும். வெளிநாடுகளுக்கு சுற்றுலா விசாவில் சென்று தொழிலில் ஈடுபடுவது சட்டவிரோதமானது என்பதற்கான அடிப்படை அறிவு கூட சிலருக்கு இல்லாத நிலை உள்ளது. இதனை பயன்படுத்திக்கொண்டு பல போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள் மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

வெளிநாடுகளுக்குச் சென்ற பின்னர், குறிப்பாக பெண்கள் பல்வேறு சுரண்டல்களுக்கும் மனித உரிமை மீறல்களுக்கும் உள்ளாகுகின்றனர். விசா காலம் முடிவடைந்த பின்னரும் அவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டு தொழிலில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சிலர் உடல் மற்றும் மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றனர். சம்பளங்கள் வழங்கப்படாமை, பாஸ்போர்ட்கள் பறிமுதல் செய்யப்படுதல், தங்குமிட சிக்கல்கள் மற்றும் தொடர்பு கொள்ள முடியாத நிலை போன்ற பல பிரச்சினைகள் தொடர்ச்சியாக பதிவாகி வருகின்றன.

இந்த நாட்டில் போதுமான பொருளாதார வாய்ப்புகளும் நிலையான வாழ்க்கைச் சூழலும் இல்லாத காரணத்தால்தான் எமது இளைஞர், யுவதிகள் கட்டார், டுபாய், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளுக்கு தொழிலுக்காகச் செல்கிறார்கள். அவர்கள் தங்கள் குடும்பங்களின் எதிர்காலத்திற்காக உயிரைப் பணயம் வைத்து அந்நிய நாட்டில் உழைக்கின்றனர். ஆனால் அவர்கள் பாதுகாப்பாகவும் மரியாதையுடனும் வாழ்வதற்கான அடிப்படை உத்தரவாதத்தைக் கூட நாம் முழுமையாக வழங்க முடியாத நிலை தொடர்கிறது.

இந்த நாட்டில் பொருளாதார மேம்பாட்டுடன் மக்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்குவதில் மக்கள் பிரதிநிதிகளாகிய நாம் தோல்வியடைந்துள்ளோம் என்பதைஏற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. குறைந்தபட்சம் வெளிநாடுகளுக்கு செல்லும் எமது மக்களின் உயிர் பாதுகாப்பையும் மனித உரிமைகளையும் உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

நாடு இன்னும் முழுமையாக வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டுவிடவில்லை. தற்போதைய பொருளாதார நிலைமை வெளிநாட்டு வருமானங்களின் மீதே பெரிதும் தங்கியுள்ளது. குறிப்பாக வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பும் பணமே நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய ஆதாரமாக இருந்து வருகிறது.

இந்நிலையில், வெளிநாடுகளில் வாழும் சில இலங்கை இளைஞர்கள் மனஅழுத்தம் மற்றும் பல்வேறு துயரங்களின் காரணமாக உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன. அவர்களின் உடல்களைக் கூட தாய் நாட்டிற்குக் கொண்டு வருவதில் குடும்பங்கள் கடுமையான சிரமங்களை எதிர்கொள்கின்றன. இது மிகவும் மனிதாபிமானமற்ற மற்றும் வேதனையூட்டும் நிலையாகும்.

எனவே, புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அனைத்துப் பிரச்சினைகளையும் அரசாங்கம் விசேட கவனத்துடன் அணுக வேண்டும். போலி முகவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். வெளிநாடுகளுக்கு செல்லும் தொழிலாளர்களுக்கு முன் விழிப்புணர்வு மற்றும்

சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும். மேலும் அவர்களின் பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் நலன்களை உறுதிப்படுத்தும் செயற்பாட்டு திட்டங்கள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். - என அவர் வலியுறுத்தினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விவகாரங்களிலும்.

இப்போது அஸ்வெஸ்ம கொடுப்பனவில் குளறுபடி நடந்திருக்கின்ற விடயமும் சுயாதீன சட்டத்தரணிகள் பேரவை சபாநாயகருக்கு முறைப்பாடு செய்யப்படும் வரை நிர்வாகத்தினால் மூடி மறைக்கப்பட்டிருந்தது. அது கண்டுபிடிக்கப்பட்ட உடனேயே அப்படி ஒரு விடயம் நடந்திருக்கின்றது, இவ்வளவு பெருந்தொகைக்கு இரட்டைக் கொடுப்பனவு வழங்கப்பட்டுவிட்டது, அதை அடுத்த கட்டக் கொடுப்பனவில் கழிப்போம் என்று நேரத்துடனேயே அரசுத் தரப்பு அறிவித்திருந்தால் அரசு நிர்வாகம் மீது சந்தேகம் வந்திருக்காது.

மாறாக, அரசுத் தரப்பு விவகாரத்தை மூடி மறைக்க முற்பட, அது அம்பலமாகி அரசின் மீதே பொறுப்பற்ற நிர்வாகம் என்ற குற்றச்சாட்டு தற்போது நிரூபணமாகி வருகின்றது.

இப்போது வெலிசறை இடைத்தங்கல் முகாமில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுருந்த 30 வெளிநாட்டவர்கள் தப்பி ஓடிய பின்னர் பொரலஸ்கமுவ பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

முதலில் கடந்த ஏப்ரல் இரண்டாம் திகதி கைதான இவர்கள், பின்னர் காணாமல் போனார்கள் அல்லது வெலிசற இடைத்தங்கல் முகாமில் இருந்து தப்பி ஓடினார்கள் என்ற விவகாரம் அல்லது அது பற்றிய செய்திகள் பெரிய அளவில் வெளியாகின எனத் தெரியவில்லை. 30 கைதிகள் தப்பிய விவகாரம் நிச்சயமாக ஊடகங்களில் பெரிய அளவில் பேசப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் இப்போது மீண்டும் அவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர்தான் அது பற்றிய விடயம் – அவர்கள் முன்னர் கைதாகித் தப்பியவர்கள் என்ற விடயம் – பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

குற்றங்கள், தவறுகள் இடம் பெறும் போது அவை பற்றிய விடயங்கள் வெளியில் வராமல் மூடி மறைக்கப்படுமானால் அந்த குற்றங்களுடன் ஆளும் தரப்புக்கு அல்லது அதிகாரத் தரப்புக்குத் தொடர்பு இருக்கும் என்ற சந்தேகம் பொதுமக்களுக்கு வருவது தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே, இனிமேலாவது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எந்த மட்டத்தில் இத்தகைய தவறுகள் இருந்தாலும் அவற்றை மூடி மறைக்காமல், முதலில் ஊடகங்கள் வாயிலாக மக்களுக்குத் தெரிவித்தால், அதுவே அந்த ஆட்சி தரப்பு மீது மக்களுக்கு ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் விடயமாக அமையும் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

*　　*　　*

வடக்கில் மையம் கொண்டிருக்கும் ஒரு கட்சிக்கு இது போதாத காலம் போலும்.

முல்லைத்தீவில் இருந்து மரக் கடத்தலில் ஈடுபட்ட ஒரு பார ஊர்தி சாவகச்சேரிப் பொலிஸாரினால் கையும் களவுமாக மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் ஊடகங்கள் வாயிலாக வெளிவந்தமை பலரும் அறிந்த விடயம்தான். இதில் பலரும் அறியாத விடயமும் உண்டு.

மரத்துடன் மடக்கிப் பிடிக்கப்பட்ட பார ஊர்தி வடமராட்சியில் இந்தக் கட்சியின் ஆளுகையில் உள்ள ஓர் உள்ளூராட்சி சபை தவிசாளரிற்குச் சொந்தமானது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதற்குச் சான்றாக பதிவுகள் ஆவணப்படுத்தப்படுவதுடன் அவரது தாயாரின் பெயர் அந்தப் பார ஊர்தியில் எழுதப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இதுதான் இவ்வாறான நிலை என்றால் அந்தக் கட்சியின் அவலம் நீள்கின்றது. அண்மையில் குருநகரில் இரு நண்பர்கள் மது அருந்தும்போது ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்தமை தெரிந்ததே. அந்தக் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவரும் இதே கட்சியின் உள்ளூராட்சி வேட்பாளர்களில் ஒருவர்தானாம்.

இதே சமயம், கடந்த ஏப்பிரல் 23 ஆம் திகதி தமிழ்நாட்டு சட்ட மன்றத் தேர்தல் இடம்பெற்றது அறிந்த விடயம்தான். இந்த தேர்தலில் ஓர் அரசியல் கட்சிக்கான தேர்தல் பணியில் ஈடுபட யாழில் இருந்து பிறிதொரு அரசியல் கட்சியின் உறுப்பினர்கள் பலர் தமிழகம் சென்று காரைக்குடி உள்ளிட்ட பகுதியில் துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

முன்னைய கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இதே நோக்கத்துக்காகத் தமிழகம் செல்வதற்கு விஸாவுக்கு விண்ணப்பித்த போதிலும், அவர்களின் முகப் புத்தகப் பதிவுகளை அவதானித்த தூதரகம் உஷாராகி, தேர்தல் பிரசார காலம் முடியும் வரை விஸா வழங்குவதை இழுத்தடித்தமையால் அந்தத் தரப்புக்கு உரிய காலத்தில் காரைக்குடிக்குப் போக முடியவில்லை என்று தெரிகின்றது.

முகப் புத்தகத்தில் வாய் வீரம், கருத்துப் பகிர்வு அடாவடி காட்டுவது வேறு. நேரடியாகக் களத்திற்குப் போய் அந்த நாட்டுத் தேர்தலில் தலையீடு செய்வது அந்த நாட்டின் மக்களின் இறைமையில் முறையற்ற விதத்தில் தலையீடு செய்வதான குற்றச் சாட்டிற்கு உரியது என்பதை மறக்கக் கூடாது.

---

## ரூ. 30 இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

30 இலட்சம் ரூபா ரொக்கமாகவும், பின்னர் மாதாந்தம் தலா 5 இலட்சம் ரூபா வீதமும் பிரதி மேயரால் கோரப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முற்பட்ட போதே, மறைந்திருந்த இலஞ்ச, ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் அவரைச் சுற்றிவளைத்துக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக குருநாகல் மாநகர சபைக்குத் தெரிவானவர். எனினும், சபையில் ஆட்சியமைப்பதற்காகத் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவு வழங்கியதையடுத்து, அவர் பிரதி மேயராகப் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

கைது செய்யப்பட்டுள்ள பிரதி மேயர் மேலதிக விசாரணைகளின் பின்னர் இன்று புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

“தூய்மையான அரசியல்” என்ற கோஷத்துடன் ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி நிர்வாகத்தின் கீழ் உள்ள பிரதி மேயர் ஒருவர், தூப்புரவுப் பணி டெண்டருக்காகவே இலஞ்சம் வாங்கி கைதாகியுள்ளமை அரசியல் வட்டாரத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

---

## விசாரணை அதிகாரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விசாரணை அதிகாரிகளால் அவர் கடும் அச்சுறுத்தலுக்கும் அழுத்தங்களுக்கும் உள்ளாக்கப்பட்டார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பகிரங்கமாகக் குற்றம் சுமத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராகப் போலி வாக்குமூலங்களை வழங்குமாறு கபில சந்திரசேனவுக்குப் புலனாய்வுப் பிரிவினர் கடும் அழுத்தம் கொடுத்தனர் என்றும் நாமல் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

விசாரணை அதிகாரிகளின் தேவைக்கேற்ப வாக்குமூலங்களைப் பெறத் தவறினால், சிறையில் அடைக்கப்படுவார் என அவர்அச்சுறுத்தப்பட்டார்என்றும்,இதனால் அவர் பாரிய மன உளைச்சலுக்கு ஆளானார் என்றும் நாமல் குறிப்பிட்டார்.

அரசு தனது அரசியல் தேவைகளுக்காகப் பொலிஸார் மற்றும் புலனாய்வு அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்துகின்றது என்று குற்றம் சுமத்திய அவர்,

“குற்றம் செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பாரபட்சமின்றி விசாரிக்கப்பட வேண்டும். ஆனால், விசாரணைகளின் போது அச்சுறுத்தல், மிரட்டல் அல்லதுபலவந்தமானமுறையில்வாக்குமூலங்களைப் பெறுவது சட்டவிரோதமானது.

நிர்வாக அமைப்புகள் அரசியல் மயப்படுத்தப்படுவதன் மூலம் நீதியான விசாரணைகள் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளன.” – என்றும் மேலும் கூறினார்.

---

## ஜூனில் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சமகால அரசியல் நிலைவரங்கள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் தற்போது மிகச்சிறந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட ஹரின் பெர்னாண்டோ, மேலும் தெரிவித்ததாவது:–

“உலகளவில் வலதுசாரிக் கொள்கை அல்லது மத்தியஸ்தப் பாதையில் நாட்டை வழிநடத்த ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே இலங்கையிலுள்ள மிகச் சிறந்த தலைவர்கள்.

இவர்களுடன் ஹர்ஷ டி சில்வா போன்ற பொருளாதாரத் திறமையாளர்கள் எங்களிடம் உள்ளனர்.

ஏப்ரல் மாதத்துக்குப் பிறகு நாடு பாரிய நெருக்கடிகளைச் சந்திக்கும் என நாம் டிசம்பரில் கூறியபோது மக்கள் சிரித்தார்கள். தற்போது டொலர் மதிப்பு 325 ரூபாயில் செயற்கையாகத் தக்கவைக்கப்பட்டுள்ளது.

அரசு டொலர் விவகாரத்தில் ஒரு நெருப்பை மறைத்து வைத்துள்ளது. இது வெடிக்கும்போது டொலரின் மதிப்பு 350 ரூபாயைத் தாண்டும்.” – என்று அவர் எச்சரித்தார்.

உலகப் போரினால் தான் விலை உயர்வு எனச் சொல்லப்படுவதை மறுத்த அவர், இந்தியா அல்லது பங்களாதேஷில் இல்லாத விலை உயர்வு இலங்கையில் மட்டும் ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

எரிபொருள் வரிசையில் நின்று கொண்டு அரசுக்கு ஆதரவாகப் பேசும் சிலரின் அறியாமையால்தான் நாடு இந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் சாடினார்.

“தொடர்ந்து இரண்டு முறை தவறு செய்துவிட்டோம் என்பதை மக்கள் இப்போது உணர்கின்றார்கள். அடிப்படைத் தேவைகளுக்கே திண்டாடும் காலம் வரும்போது, இன்று அரசுக்கு ஆதரவாகப் பேசும் வீண் பேச்சுக்களுக்குப் பதில் கிடைத்துவிடும். நாம் தற்போது அமைதியாக எல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம்” என்றும் ஹரின் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

நாட்டைஉலகுக்குஅடையாளம்காட்டிய வலதுசாரிக் கொள்கைக்கு மக்கள் மீண்டும் ஆதரவளிப்பார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.









# வியட்நாம் ஜனாதிபதி - பிரதமர் ஹரிணி முக்கிய பேச்சு!

இலங்கைக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ள வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாம் மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான இருதரப்பு பேச்சு நேற்று பிற்பகல் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இங்கு வியட்நாம் ஜனாதிபதியை மிக வும் அமோகமாக வரவேற்ற பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பை ஏற்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமைக்காகத் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கை மற்றும் வியட்நாம் இடையிலான இராஜதந்திர உறவுகளுக்கு 56 ஆண்டுகள் நிறைவடையும் தருணத்தில் மேற்கொள்ளப்படும் டோ லாமின் இந்த இலங்கை விஜயமானது, இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான பங்களிப்பு, நம்பிக்கை மற்றும் நட்புறவைப் பிரதிபலிப்பதாக அமைவதுடன், எதிர்காலத்தில் இரு நாட்டு உறவுகளிலும் ஒரு புதிய மைல்கல்லைக் குறிக்கும் என்றும் பிரதமர் இங்கு குறிப்பிட்டார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிறுபான்மையினர் உரித்து

இலங்கையில் அரசியல் கட்சிகளின் செயற்பாட்டு முறைமைகள் தொடர்பில் சட்டமா அதிபரின் ஒரு பரிந்துரை நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலை தீர்மானிப்பதற்கான குழுவின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டு இருக்கின்றது. சிறுபான்மையினத்தவரைப் பொறுத்தவரை இது மிக முக்கிய விடயமாகும்.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் ஒரு தனிநபர் சட்டமூலத்தை பிரேரணையாக முன்வைக்க புதிய ஜனநாயக முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணநாயக்க முயன்றார்.

தனியான இனங்களின் பெயரிலும், மதங்களின் பெயரிலும், மொழியின் பெயரிலும், பிரதேசங்களின் பெயரிலும் கட்சிகள் இயங்க முடியாது என்றும், அந்தப் பெயர்களில் இருக்கும் கட்சிகளைத் தடை செய்ய அல்லது பெயர் மாற்றம் செய்யப் பணிக்கும் விதத்தில் சட்டமூலம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சாரப்பட அந்தப் பிரேரணை முன்மொழியப்பட்டது.

'இலங்கைத் தமிழரசு கட்சி', 'தமிழ் முற்போக்குக் கூட்டணி', 'ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்' என்று சிறுபான்மையினரின் பல கட்சிகளுக்கு ஆப்பு வைக்கும் விதத்தில் இந்த முயற்சியை ரவி கருணநாயக்க முன்நகர்த்தினார்.

அதனை நாடாளுமன்றத்தில் கடுமையாக ஆட்சேபித்தார் இலங்கைத் தமிழரசு கட்சியின் உறுப்பினர் இரா. சாணக்கியன்.

இது தொடர்பாக ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் சில வழக்குகளில் முன்னிலையாகி, அவ்வாறு மொழி, இனம், மதம், பிரதேசம் ரீதியாகப் பெயரிட்டு, அவற்றுக்காக அரசியல் கட்சிகள் இயங்குவதற்கு அரசமைப்பின் கீழ் முழு உரித்து இருக்கின்றது என்ற தீர்ப்பை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பெற்றிருக்கின்றார் என்று குறிப்பிட்ட சாணக்கியன் எம்.பி., உயர் நீதிமன்றத் தீர்ப்பை மீறி அத்தகைய சட்டத்தைக் கொண்டுவர முடியாது என்று வாதிட்டார். அந்தத் தீர்ப்புகளின் விவரங்களையும் அவர் சமர்ப்பித்தார்.

இதனை அடுத்து இந்த விவகாரத்தை அந்தத் தீர்ப்புகள் பற்றிய விவரங்களுடன் சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்து, அவரின் ஆலோசனைக்கு அமைய நடவடிக்கை எடுக்கலாமென்று அரசுத் தரப்பு கூறி விடயத்தை அந்தச் சமயத்தில் சமாளித்து இருந்தது.

நேற்று நாடாளுமன்ற விவகாரக் குழுவின் கூட்டத்தில் சட்டமா அதிபரின் பதில் வந்திருப்பதாக தெரிவித்து அதனை அந்தக் கூட்டத்தில் ஆளும் தரப்பு சமர்ப்பித்தது.

அந்தத் தீர்ப்புகளின்படி இப்படி தனி இனம், மொழி, மதம், பிரதேசம் சார்ந்து கட்டமைப்புகள் இயங்க முடியும் எனவும், அதற்கு அரசமைப்பில் உறுதிப்படுத்தல்கள் இருக்கின்றன எனவும் உயர்நீதிமன்றம் இத்தீர்ப்புகள் மூலம் தெளிவு படுத்தி இருக்கின்றமையினால் ரவி கருணநாயக்க சமர்ப்பித்த வடிவத்தில் அந்தச் சட்டமூலத்தை முன்னெடுக்க முடியாது என்று அந்தக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

சிறுபான்மை இனங்கள், மதங்கள், மொழிகள் அவர்களின் பிரதேசங்கள் தொடர்பான உரித்துக்கள் மீண்டும் ஒரு தடவை நாடாளுமன்ற விவகாரக் குழுவின் கூட்டத்தில் சட்டமா அதிபரின் கருத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது முக்கிய விவகாரம் ஆகும்.

இப்படி ரவி கருணநாயக்காவின் நாசூக்கான நகர்த்தலின் பின்புலத்தில் பேரினவாதத்தின பௌத்த, சிங்கள மேலாதிக்கச் செல்வாக்கே - மேலாண்மைப் போக்கே - ஊடுருவியிருந்தது என்பதும், அதனை சுமந்திரன் வாதாடிப் பெற்றுக் கொண்ட உயர் நீதிமன்ற தீர்ப்புகளும், நாடாளுமன்றத்தில் சாணக்கியன் முன்வைத்த கடும் எதிர்ப்புமே முறியடித்தன என்பதும் ஈண்டு குறிப்பிடப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.




# நடுக்கடலில் பழுதடைந்து ஐந்து மணி நேரம் தாமதித்து நாகையை அடைந்தது ‘சிவகங்கை’

(ந.லோகதயாளன்)

காங்கேசன்துறையில் இருந்து நேற்று நாகபட்டினம் நோக்கிப் பயணித்த கப்பல் நடுக் கடலில் பழுதடைந்தமையால் பயணிகள் 5 மணி நேரம் தாமதித்தே நாகபட்டினத்தைச் சென்றடைந்தனர்.

இலங்கை – இந்தியா இடையே இடம் பெறும் பயணிகள் கப்பல் சேவையான “சிவகங்கை” கப்பல் நேற்று 2.30 மணியளவில் காங்கேசன்துறையில் இருந்து 120 பயணிகளுடன் புறப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் சர்வதேச எல்லையைத் தாண்டி இந்திய எல்லைக்குள் பயணித்த சமயம் இயந்திரக் கோளாறு காரணமாக கப்பல் நடுக் கடலில் நின்றுள்ளது.

பழுதடைந்து நடுக்கடலில் நின்ற “சிவகங்கை” கப்பல் பிற கப்பலின் உதவியுடன் கட்டி இழுத்துக் கரைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

நாகபட்டினம் இறங்குதுறையை இரவு 11 மணியளவிலேயே கப்பல் சென்றடைந்துள்ளது.

# விடைபெற்றார் வியட்நாம் ஜனாதிபதி

## வெற்றிகரமாக நிறைவடைந்தது டோ லாமின் இலங்கை விஜயம்

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்புக்கு இணங்க, இலங்கைக்கு அரச விஜயம் மேற்கொண்டிருந்த வியட்நாம் சோஸலிசக் குடியரசின் ஜனாதிபதியும் வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் பொதுச் செயலாளருமான டோ லாம் உள்ளிட்ட தூதுக் குழுவினர், தமது விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து, நேற்று இரவு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

வியட்நாம் – இலங்கை இடையிலான நட்புறவையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தி, இரு நாட்டு மக்களுக்கும் பல்வேறு நன்மைகளை பெற்றுத்தரும் வகையில், வியட்நாம் சோசலிசக் குடியரசின்ஜனாதிபதிஉள்ளிட்டதூதுக்குழுவினர் இலங்கையில் வெற்றிகரமான விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

வியட்நாம் ஜனாதிபதி ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டது 15 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆகும். தற்போதைய அரசின் கீழ் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்து இலங்கை முன்னேறிச் செல்லும் ஒரு தருணத்தில் இந்த விஜயம் அமைந்திருப்பது சிறப்பம்சமாகும்.

வியட்நாம் சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினரை வழியனுப்புவதற்காக, கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவினர் விமான நிலையத்துக்கு வருகை தந்திருந்தனர்.










# முல்லைத்தீவிற்கான அஞ்சல் பரிவர்த்தனைக்கு வாகனசேவை நேற்றுத் தொடக்கம் ஆரம்பம்

## தமது தொடர்முயற்சி வெற்றி என ரவிகரன் எம்.பி. மகிழ்ச்சி

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவிற்கான அஞ்சல் பரிவர்த்தனை வாகன சேவையை ஆரம்பிக்குமாறு தொடர்ச்சியாக தம்மால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுவந்த நிலையில், தமது கோரிக்கையை ஏற்று நேற்றிலிருந்து முல்லைத்தீவிற்கான அஞ்சல் பரிவர்த்தனை வாகனசேவை ஆரம்பிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிப்பதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு தனது தொடர் கோரிக்கையை ஏற்று முல்லைத்தீவிற்கான அஞ்சல் பரிவர்த்தனை வாகனத்தை உடனடியாக சேவையில் ஈடுபடுத்துவதற்கான வழிவகைகளை மேற்கொண்ட வெகுசன ஊடகப் பிரதி அமைச்சர் கலாநிதி கௌசல்யா ஆரியரத்னவிற்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

# பல்கலைக்கழக அனுமதி நடைமுறையில் மாணவர்களுக்குக் "காலக்கெடுப் பொறி"!

## உடனடி சீரமைப்பைக் கோருகிறது சிறகுகள் அமையம்

இலங்கையில் உயர்தரக் கல்வியை முடித்து பல்கலைக்கழகப் பிரவேசத்திற்காகக் காத்திருக்கும் மாணவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் விண்ணப்பக் காலக்கெடு நடைமுறைகளில் அவசர மாற்றங்களைக் கோரி "சிறகுகள் அமையம்" நேற்று உத்தியோகபூர்வ கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது.

தற்போதைய நடைமுறையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பொதுவான விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னதாகவே, சில விசேட பாடநெறிகளுக்கான தகுதித் தேர்வு விண்ணப்பங்கள் (Aptitude Exam) நிறைவடைவதால் மாணவர்கள் பாரிய அநீதிக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என சிறகுகள் அமையம் சுட்டிக் காட்டுகிறது.

**முக்கிய முரண்பாடுகள்**

2026 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்க வேண்டிய உத்தியோகபூர்வ இறுதித் திகதி மே 19, 2026 என அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பின்வரும் பல்கலைக்கழகங்கள் அதற்கும் முன்னதாகவே விண்ணப்பங்களை மூடுகின்றன:-

★ மொறட்டுவை பல்கலைக்கழகம்: கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் மே 6 உடன் நிறைவடைகின்றன.

★ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்: உடற்கல்வி மற்றும் நுண்கலை பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் மே 7 உடன் நிறைவடைகின்றன.

★ கிழக்குப் பல்கலைக்கழகம்: நுண்கலைப் பாடநெறிகளுக்கான விண்ணப்பங்கள் மே 13 உடன் நிறைவடைகின்றன.

**"காலக்கெடுப் பொறி"**
**(Deadline Trap)**

"இந்த நடைமுறை முரண்பாடானது மாணவர்களுக்கு ஒரு பொறியாக அமைகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இறுதித் திகதி வரை காத்திருக்கும் ஒரு மாணவர், அதற்கு முன்னரே மூடிவிடப்படும் விசேட பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கும் தகுதியைத் தானாகவே இழக்கிறார். இது மாணவர்களின் தெரிவு சுதந்திரத்தை பறிக்கும் செயலாகும்" என சிறகுகள் அமையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

குறிப்பாக, போதிய இணைய வசதிகள் இல்லாத, தகவல்கள் தாமதமாகச் சென்றடையும் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

**முன்வைக்கப்படும் கோரிக்கைகள்**

இந்த நிர்வாகச் சிக்கலைத் தீர்க்க சிறகுகள் மையம் பின்வரும் பரிந்துரைகளை முன்வைத்துள்ளது:-

அனைத்துப் பல்கலைக்கழகத் தகுதித் தேர்வுகள் மற்றும் செய்முறைத் தேர்வுகளுக்கான விண்ணப்ப முடிவுத் திகதியானது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்

பொதுவான விண்ணப்ப முடிவுத் திகதிக்கு குறைந்தது ஏழு நாள்களுக்குப் பின்னரே நிர்ணயிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பக் காலக்கெடு தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட அறிவித்தலை அனைத்து மாணவர்களுக்கும் சென்றடையும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்த வேண்டும்.

இந்தக் கோரிக்கை அடங்கிய விரிவான முன்மொழிவு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், கல்வி அமைச்சர், ஜனாதிபதி செயலகம் மற்றும் யுனெஸ்கோ இலங்கைக் கிளை ஆகியவற்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இலவசக் கல்வியின் நன்மைகள் தகுதியுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சமமாகச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். - என சிறகுகள் அமையம் வலியுறுத்துகிறது.



# டயகம – தலவாக்கலை பிரதான சாலை பயன்படுத்த ஆபத்தான நிலைமையில்!

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

டயகம – தலவாக்கலை இடையிலான பிரதான போக்குவரத்துச் சாலை கடந்த கால இயற்கை அனர்த்தங்களினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு, இன்று மக்கள் பயன்படுத்த முடியாத ஆபத்தான நிலையில் காணப்படுகிறது.

போர்ட்மோர் பகுதியில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டு பாதை மிகவும் மோசமடைந்துள்ளது.

வீதி சீரமைக்கப்படாமையினால் நாளாந்தம் பயணிக்கும் தொழிலாளர்கள், மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

இதுவரை எந்தவொரு அரச அதிகாரியும் இந்தப் பகுதியை நேரில் வந்து பார்வையிடவோ, தற்காலிக தீர்வுகளை வழங்கவோ இல்லை எனப் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்தும் இந்த வீதி புறக்கணிக்கப்படுமானால், பாரிய விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு மண்சரிவு ஏற்பட்டுள்ள இடங்களைச் சீரமைக்க வேண்டும். போக்குவரத்துக்குப் பாதுகாப்பான சூழலை உறுதி செய்ய வேண்டும். மலையக மக்களின் அடிப்படைத் தேவையான போக்குவரத்து வசதியை மேம்படுத்த வேண்டும்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஞ்சுல சுரவீர ஆராய்ச்சி, கிருஷ்ணன் கலைச்செல்வி மற்றும் ஏனைய நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடன் கவனம் செலுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோருகின்றனர்.

# பொலிஸார் வழங்கும் தற்காலிக சாரதி லைசென்ஸை 8 முறை போலியாக நீடித்துப் பயன்படுத்தியவர் கைது

**(கனகராஜா சரவணன்)**

பொலிஸாரால் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திரத்தை போலியாக 8 முறை நீடித்து வைத்திருந்து பயன்படுத்தினார் என்று கூறப்படும் ஒருவர் மட்டக்களப்புத் தாழங்குடாப் பகுதி வீதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். காத்தான்குடியை சேர்ந்த 45 வயதுடைய இந்த நபரை எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டார்.

இது பற்றித் தெரியவருவதாவது:–

கடந்த 4 ஆம் திகதி தாழங்குடாப் பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை நிறுத்திச் சோதனை செய்தனர்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் பொலிஸாரால் வழங்கப்படும் தற்காலிக சாரதி அனுமதி பத்திரத்தைக் காட்டியுள்ளார். பொலிஸார் சந்தேகம் கொண்டு அந்தத் தற்காலிக அனுமதிப் பத்திரத்தைச் சோதனையிட்டனர்.

இதன்போது அந்தச் சாரதி அனுமதிப் பத்திரம் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி யாழ். கோப்பாய் பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற வீதி விபத்தில் சாரதி அனுமதி பத்திரம் பொலிஸாரால் கைப்பற்றி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டமை தொடர்பாக வழங்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது. கோப்பாய் பொலிஸார் அந்தத் தற்காலிகமாக சாரதி அனுமதி பத்திரத்தை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து சம்மாந்துறையைச் சேர்ந்த – கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றி, தற்போது தம்பலகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவரும் – பொலிஸ் உத்தியோகத்தர் இந்தத் தற்காலிக சாரதி அனுமதி பத்திரத்தை கோப்பாய் பொலிஸ் நிலைய இறப்பர் முத்திரையைப் பயன்படுத்தி 8 முறை அதனை சட்டவிரோதமாக நீடித்துக் கொடுத்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அந்த பொலிஸ் அலுவலரின் சம்மாந்துறை வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு கோப்பாய் பொலிஸ் நிலைய இறப்பர் முத்திரையை மீட்டுள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து போலி அனுமதிப் பத்திரம் வைத்திருந்த காத்தான்குடியைச் சேர்ந்தவரைக் கைது செய்து, மீட்கப்பட்ட சான்று பொருளான இறப்பர் முத்திரையுடன் கடந்த 4 ஆம் நீதிமன்றில் பொலிஸார் ஆஜர் செய்தனர். அப்போது அவரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலைய இறப்பர் முத்திரையை வைத்திருந்த பொலிஸ் அலுவலரை வரவழைத்து பொலிஸார் விசாரணை செய்தனர். அப்போது அவர் தமது மனைவி இந்த இறப்பர் முத்திரையை பயன்படுத்தி உள்ளார் எனத் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார் எனப் பொலிஸார் தகவல் வெளியிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# தொடர்ந்து பெய்து வரும் கனமழையினால் நாவலப்பிட்டி பஸ் நிலையம் வெள்ளத்தில்!

**(மஸ்கெலியா விசேட நிருபர்)**

மத்திய மலைநாட்டில் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள நாவலப்பிட்டி நகரில் நாவலப்பிட்டி கம்பளை வீதியில் பஸ் நிலையப் பகுதி அடிக்கடி நீரில் மூழ்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக மத்திய மலைநாட்டில் நுவரெலியா,கண்டி, பதுளை மாவட்டத்தில் மாலை வேளையில் இடி மின்னலுடன் கூடிய கன மழைக்கு பெய்தது வருகிறது.

இதன் காரணமாக நாவலப்பிட்டி நகரில் உள்ள பஸ் நிலையத்தில் சுமார் ஓர் அடி உயரத்தில் கழிவு நீர் மற்றும் மழை வெள்ள நீர் தேங்கி நிற்பதால் பாடசாலை மாணவர்கள், பயணிகள், சாரதிகள், நடத்துநர்கள், பஸ் நிலையத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டு வரும் வர்த்தகர்கள் பெரிதும் பாதிக்கல்பட்டு வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட நாவலப்பிட்டி நகர சபை முதல்வர் மற்றும் நாவலப்பிட்டி நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வந்து நாவலப்பிட்டி நகரில் உள்ள அனைத்து வடிகால்களும் எதிர்கால சந்ததியினருக்கு இவ்வாறான நிலை இல்லாமல் முறையாக செப்பனிட்டு அந்த கழிவு நீர் கால்வாய் வழியாக மகாவலி கங்கைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர் பாதிக்கப்பட்ட மக்கள்.










# அக்கரையங்குளம் பகுதியில் நான்கு வெடிகுண்டுகள் மீட்பு

## செயலிழக்கச் செய்வதற்கு நடவடிக்கை

**(பூ.லின்ரன்)**

அக்கரையங்குளம் பொலிஸ் எல்லைக்குட்பட்ட வெனேரிகுளம் பகுதியில், போரின் போது பயன்படுத்தப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நான்கு வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஜெயபுரம் பொலிஸ் நிலையத்தில் ஹலோ டிரஸ்ட் (HALO Trust) கண்ணிவெடி அகற்றும் நிறுவன அதிகாரிகளால் இது குறித்த முதற்கட்டத் தகவல் வழங்கப்பட்டது. இருப்பினும், அந்தப் பகுதி அக்கரையங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்டது என்பதால், அதனடிப்படையில் உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, நேற்றுப் பிற்பகல் 2:30 மணியளவில் ஹலோ டிரஸ்ட் அதிகாரிகள் வழங்கிய தகவலின்படி, அக்கரையங்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் அந்த இடத்திற்குச் சென்று நான்கு குண்டுகளையும் மீட்டனர்.

மீட்கப்பட்ட குண்டுகள் தற்போது பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்திற்குள் வைக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் குறித்து இன்று கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட உள்ளது.

நீதிமன்றத்தின் அனுமதி மற்றும் வழிகாட்டுதல்களின் பின்னர், இந்த நான்கு வெடிகுண்டுகளையும் பாதுகாப்பான முறையில் செயலிழக்கச் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# முல்லைத்தீவில் சர்வமதப் பிரார்த்தனை

**(மரியசீலன் திலைக்ஸ்)**

உலக அரங்கில் நடைபெறும் கொடிய யுத்த வன்முறைகள் நிறுத்தப்பட்டு, அமைதி நிலவவும் அதில் கொல்லப்பட்டவர்களுக்கு சாந்தி கிட்டவும்ன்நீதி சமாதான நல்லிணக்க பணியகத்தின் முன்னெடுப்பில் நேற்று முல்லைத்தீவில் சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது.

இந்தப் பிரார்த்தனையை ஒட்டி 'யுத்தத்தின் நிழலில் மனித மாண்பும் நாடுகளின் வாழ்வாதாரமும்' என்ற தலைப்பில் மனிதாபிமானத்திற்கான கூட்டு அறைகூவல் ஒன்றும் விடுக்கப்பபட்டது.





# இலங்கையின் முதன்மையான வர்த்தகப் பங்காளி இந்தியாவே

## தூதுவர் சந்தோஷ் ஜா புள்ளிவிவரங்களுடன் விளக்கம்

இலங்கையின் முதன்மையான வர்த்தகப் பங்காளி சீனாதான் என்று இந்தியாவில் உள்ள சீனத் தூதரகத்தின் செய்தித் தொடர்பாளர் உரிமை கோரியமையைத் தொடர்ந்து, இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியாவே தொடர்கிறது என்பதை இந்தியா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்திய வர்த்தகத் துறையின் வர்த்தக புள்ளிவிவரங்களைப் பகிர்ந்து இந்த விளக்கத்தை அளித்துள்ள இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, 2025ஆம் ஆண்டில் இந்தியா - இலங்கை இடையிலான இருதரப்பு வர்த்தகப் புழக்கம் 6.4 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.



இலங்கை மத்திய வங்கியின் தரவுகளை மேற்கோள் காட்டி, சீனா - இலங்கை இடையிலான வர்த்தகம் 2025 இல் 5.5 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளதாக சீனத் தூதரக செய்தித் தொடர்பாளர் யு ஜிங் கூறியமையைத் தொடர்ந்து, உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் வலைத்தளப் பதிவில் -

இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகப் பங்காளியாக இந்தியாவே இன்னும் தொடர்கிறது. இந்திய வர்த்தகத் துறையின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் இருதரப்பு வர்த்தகப் புழக்கம் 6,417 மில்லியன் டொலர்களாகும். இலங்கையின் ஏற்றுமதி 2020 இல் 689 மில்லியன் டொலர்களிலிருந்து, 2025 இல் 1,532 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

2000 ஆம் ஆண்டில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து, இலங்கையின் ஏற்றுமதி 30 மடங்குக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இலங்கையின் ஏற்றுமதிக்கான இரண்டாவது பெரிய நாடாக இப்போது இந்தியா விளங்குகிறது. - எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


# வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டு தாக்கப்பட்டு 3 மணி நேரத்தின் பின் விடுவிப்பு!

**(வவுனியா நிருபர்)**

வவுனியாவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டு மூன்று மணி நேரத்தின் பின் விடுவிக்கப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் செல்வதற்காக நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் பஸ் ஒன்றில் ஏறி அமர்ந்து தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரிடம் இருந்து ஓட்டோச் சாரதி ஒருவர் கைத்தொலைபேசியைப் பறித்துக் கொண்டு பஸ்ஸில் இருந்து கீழே



இறங்கியுள்ளார்.

அவர் தமக்கு நேர்ந்த விடயத்தை விவரித்தார்.

அங்கு நின்ற ஓட்டோ ஓட்டுனர்கள் சிலர் தன்னை ஓட்டோவில் ஏறுமாறு கூறி ஏற்றிக் கொண்டு வவுனியா புதிய பஸ் நிலையத்திற்கும், சோயா வீதிக்கும் இடையிலுள்ள வயல் வெளி பகுதிக்கு அழைத்து சென்று என்னை தாக்கினர். அவர்களால எழுதப்பட்ட கடிதம் ஒன்றில் கையொப்பமும் பெற்றனர். தொலைபேசியில் இருந்த சில ஆவணங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அதன் பின் மாலை 6.30 இற்கு பின்னர் என்னை விடுவித்தனர்.- எனப் பாதிக்கப்பட்டவர் தெரிவித்தார். இச் சம்பவம் தொடர்பில வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள் எதாகவும் பாதிக்கப்பட்டவர் மேலும் தெரிவித்தார்.

# கோட்டாவுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவு

அறகலய போராட்ட சமயம், 2022 ஆம் ஆண்டு மே 9 வன்முறையின் போது தமது சொத்துகள் சேதப்படுத்தப்பட்டன எனக் கூறி, சட்டவிரோதமான முறையில் நஷ்டஈடு பெற்றுக்கொண்ட முன்னாள் அமைச்சர்களிடமிருந்து அந்தப் பணத்தை மீளப் பெறுவதற்கு உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு மீண்டும் அழைப்பாணை விடுக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இந்த அடிப்படை உரிமை மீறல் மனுத் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, இவ்வழக்கின் பிரதிவாதியாகப் பெயரிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குஅழைப்பாணை அனுப்ப நடவடிக்கைகளை எடுக்குமாறு மனுதாரர் தரப்புக்கு நீதிமன்றம் அறிவுறுத்தியது.

முன்னதாக பல சந்தர்ப்பங்களில் இவருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிடப்பட்டிருந்த போதிலும், அந்தச் செயல்முறையை மீண்டும் முறையாகப் பூர்த்தி செய்யுமாறு உயர் நீதிமன்றம் பணித்துள்ளது.

2022 மே 9 ஆம் திகதி காலி முகத்திடலில் அமைக்கப்பட்டிருந்த "கோட்டா கோ கம" போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைத் தொடர்ந்து, நாடு முழுவதும் அப்போதைய ஆளுங்கட்சியான மொட்டுக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டமையோடு அவற்றுள் பல தீக்கிரையாக்கப்பட்டன.

இவ்வாறு சேதமடைந்த சொத்துக்களுக்கு அரச நிதியிலிருந்து நட்டஈடு வழங்க அப்போதைய அமைச்சரவை தீர்மானித்திருந்தது.


அமைச்சரவையின் இந்தத் தீர்மா



னம் சட்டவிரோதமானது எனவும், இது பொதுமக்களின் வரிப்பணத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகும் எனவும் தெரிவித்தே இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இப்படி நட்டஈடு வழங்கப்பட்டமை சட்டவிரோதமானது என அறிவிக்குமாறும், சட்டத்துக்குப் புறம்பாக நட்டஈடு பெற்ற அமைச்சர்களிடமிருந்து அந்தப் பணத்தை மீட்டு அரசாங்கத்திடம் வழங்குவதற்கு உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் நீதிமன்றத்தைக் கோரியுள்ளனர்.

# த.வெ.கவுக்கு ஆதரவு வழங்காமை குறித்து ஐ.யூ.எம்.எல். தலைவர் விளக்கம் தெரிவிப்பு!



தமிழக சட்டப்பேரவையில் பெரும்பான்மையை நிரூபிக்கத் த.வெ.க.வுக்கு தமது ஆதரவு இல்லை என்று இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி விளக்கம் அளித்துள்ளது.

இதுகுறித்து அந்த கட்சியின் சமூக வலைதளப் பதிவில், 'த.வெ.கவுக்கு ஆதரவு இல்லை. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தொடர்கிறது என காதர் மொகிதீன் கூறினார்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.யூ.எம்.எல். தலைவர் காதர் மொகிதீன் வெளியிட்ட அறிக்கையில்,

'தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இடம் பெற்று பாபநாசம், வாணியம்பாடி ஆகிய இரண்டு தொகுதிகளில் முறையே ஏ.எம். ஷாஜஹான், சையது ஃபரூக் பாஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் ஜனநாயக முறையிலான ஆட்சி நிறுவப்படுவதற்கு தி.மு.க. தலைவர் மு. க. ஸ்டாலின், தமிழக ஆளுநருக்கு விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் முழு மனதோடு வரவேற்கிறது. சட்டமன்றத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கினுடைய இரண்டு உறுப்பினர்களும் ஆளுநர் மேற்கொள்ளக் கூடிய அரசு அமைப்புக்கான அனைத்து செயல்பாடுகளுக்கும் துணை நிற்பர் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்'.- எனத் தெரிவித்துள்ளார்.

# த.வெ.க. ஆட்சிக்கு பூரண ஆதரவு; அமைச்சரவையில் பங்கேற்கோம்!

## இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் தலைவர்கள் விவரிப்பு



"தவெக ஆட்சி அமைக்க நாங்கள் வெளியில் இருந்து ஆதரவு மட்டுமே தருகிறோம். இது கூட்டணி அல்ல. மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளில் தி.மு.கவுடன் இணைந்து பயணிப்போம்" என இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

த.வெ.க. ஆட்சியமைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளன. இதையடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடத்தில் கூறும்போது,

"தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு அமைய வேண்டும் என்பதே அவசியம்.

அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியைத் தோற்கடிக்கவே தி.மு.கவுடன் கூட்டணி வைத்தோம். தற்போது அது நடந்துள்ளது. பா.ஜ.க. ஓர் இடத்தில் மட்டுமே வென்றுள்ளது. ஆளுநர் ஆட்சியை தடுக்கவே த.வெ.கவுக்கு ஆதரவு கொடுக்கிறோம். திருமாவளவன் மற்றொரு கூட்டத்தில் இருக்கிறார். நாங்கள் எடுக்கும் முடிவை ஆதரிப்பதாக கூறியுள்ளார்.

10 ஆம் திகதிக்குள் ஆட்சி அமைக்காவிடில் சிக்கல் ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. அமைச்சரவையில் பங்கேற்க மாட்டோம். வெளியில் இருந்து ஆதரவு மட்டுமே தருகிறோம்.

கொல்லைப்புறமாக பா.ஜ.க. ஆட்சி நடத்துவதை அனுமதிக்க கூடாது என்ற அடிப்படையில்தான் நாங்கள் முன்னெடுத்துள்ளோம். மதச்சார்பற்ற கொள்கைகளை முன்னெடுப்பது, மாநில உரிமைகளைப் பாதுகாப்பது, தமிழகத்தின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது என தி.மு.க. நிறைவேற்றியுள்ள திட்டங்களை, நாங்களும் தி.மு.கவும் இணைந்துதான் நிறைவேற்றியுள்ளோம்.

அந்த வகையில் மதவெறி சக்திகளுக்கு எதிராக, ஒன்றிய பா.ஜ.க. அரசு மாநில உரிமைகளை பறிக்கிறபோது, தி.மு.கவுடன் இணைந்து மாநில உரிமைகளை பாதுகாப்பது, மதவெறிக்கு எதிராக போராடும் போராட்டம் தொடரும். அதோடு தி.மு.கவுடனான உறவு தொடரும்.

உள்ளூட்சித் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் பற்றி பின்னர் பார்த்துக் கொள்ளலாம். த.வெ.க. ஆட்சி அமைக்க கூடாது என ஸ்டாலின் கூறவில்லை. த.வெ.க. ஆட்சி அமைக்கட்டும். நாங்கள் எதிர்க்கட்சியாக செயல்படுவோம் என்றுதான் சொன்னார். எங்களின் முடிவுக்கு தி.மு.கவின் ஒப்புதல் தேவை இல்லை நாங்கள் தன்னிச்சையான கட்சிகள். மதச்சார்பற்ற ஓர் அரசை அமைக்க வேண்டும் என்பதற்காகத்தான் விஜய் எங்களிடம் ஆதரவு கோரியுள்ளார்" என்றார் பெ.சண்முகம்.

அப்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் கூறும்போது,

"மக்கள் முன்மொழிந்ததை நாங்கள் வழிமொழிந்துள்ளோம். இனி வருங்காலங்களில் விஜய் மாநில உரிமை, மதச்சார்பின்மை ஆகியவை குறித்து குரலை முப்ப வேண்டும். மக்கள் விஜய்க்கு வாய்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அது இடதுசாரிகளால் தடைபட்டுவிடக் கூடாது. அமித் ஷா ஆட்சியை தடுக்கவே த.வெ.கவுக்கு ஆதரவு தருகிறோம். மாநில உரிமை பறிபோனால் உரத்த குரல் எழுப்புவோம். போராடுவோம்".- என்றார்.

# அமெரிக்காவின் 14 அம்சத் திட்டத்தை பரிசீலிப்பதாக தகவல் தெரிவித்த ஈரான்!



அமெரிக்காவின் 14 அம்ச அமைதி திட்டத்தை பரிசீலித்து வருகிறோம் என்று ஈரான் வெளியுறவுத் துறை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ஈரான் இடையே கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி முதல் போர் நடைபெற்று வந்த நிலையில் கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி இரு தரப்பு இடையே போர் நிறுத்தம் அமலுக்கு வந்தது. இந்த சூழலில் போருக்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்க 14 அம்ச அமைதி திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்துள்ளது.

அடுத்த 15 ஆண்டுகளுக்கு யுரேனியத்தை செறிவூட்டக்கூடாது. தற்போது கையிருப்பில் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அமெரிக்காவிடம் வழங்க வேண்டும். ஹார்முஸ் ஜலசந்தியை முழுமையாக திறக்க வேண்டும். இந்த நடவடிக்கைகளுக்கு பதிலாக அமெரிக்காவின் பொருளாதார தடையால் முடக்கப்பட்ட ஈரானின் சொத்துகள், நிதி ஆதாரங்கள் விடுவிக்கப்படும் என்பன உள்ளிட்ட 14 அம்ச திட்டத்தை அமெரிக்கா முன்மொழிந்திருக்கிறது.

இது குறித்து ஈரான் வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் நேற்று கூறும்போது, "அமெரிக்காவின் அமைதித் திட்டத்தை தீவிரமாக பரிசீலித்து வருகிறோம். எங்களது முடிவை பாகிஸ்தான் மூலம் அமெரிக்காவுக்கு தெரிவிப்போம்" என்றார்.

ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறும்போது, "அமெரிக்கா உடனான ராஜ்ஜிய ரீதியிலான பேச்சுவார்த்தையில் ஈரானின் கை ஓங்கியிருக்கிறது. நியாயமான அமைதி ஒப்பந்தத்தை மட்டுமே ஏற்றுக் கொள்வோம்" என்றார்.

ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரானிடம் தொலைபேசியில் பேசினார். அப்போது பெசெஷ்கியன் கூறும்போது, "சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்ட அமைதி பேச்சுவார்த்தை மூலம் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க ஈரான் விரும்புகிறது. அதேநேரம் ஈரான் மக்களின் உரிமைகளை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம்" என்றார்.

ஜனாதிபதி ட்ரம்ப் கருத்துத் தெரிவிக்கையில், ஈரானுடன் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. அந்த நாட்டுடன் சுமுக உடன்பாடு எட்டப்பட வாய்ப்பிருக்கிறது.

48 மணி நேரத்துக்குள் ஈரான் முடிவு எடுக்க வேண்டும். ஒருவேளை அமைதி உடன்பாடு எட்டப்படவில்லை என்றால் ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்படும். ஈரான் நரகமாக மாறும் என்று தெரிவித்தார்.

# எரிசக்தி நெருக்கடியைச் சமாளிக்க ஆசியான் நாடுகள் பிலிப்பைன்ஸில்!

அமெரிக்கா – இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே நடைபெற்றுவரும் போரால் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பாதிப்புகள் மற்றும் எரிசக்தி விலையேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்துக்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பான 'ஆசியான்' (ASEAN) தலைவர்கள் பிலிப்பைன்ஸில் கூடியுள்ளனர்.

இந்த உச்சிமாநாட்டின் தொடக்கத்தில் பேசிய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர், ஈரான் போரால் வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ளன. இது பொது மக்களின் வாழ்வாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது என்று கவலை தெரிவித்தார்.

குறிப்பாக, ஹோர்முஸ் நீரிணை மூடப்பட்டுள்ளதால் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விநியோகம் முடங்கியுள்ளது.

இந்த நெருக்கடியைத் தீர்க்க எரிசக்தி பகிர்வு ஒப்பந்தம் மற்றும் பிராந்திய மின்சார விநியோகக் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்க உறுப்பு நாடுகள் திட்டமிட்டுள்ளன.

ஹோர்முஸ் நீரிணையை மீண்டும் திறக்க வலியுறுத்தியும், உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்த ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆசியான் சார்பில் கூட்டறிக்கை வெளியிடப்படவுள்ளது.

எரிசக்தி பற்றாக்குறை காரணமாக இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் மலேசியா போன்ற நாடுகள் ஏற்கனவே பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள்- 09.05.2026




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். இன்று அதிர்ஷ்டம் காணப்படும். உங்களின் நம்பிக்கையான போக்கு காரணமாக பயனுள்ள முடிவுகளை எடுப்பீர்கள்.

உங்கள் பணியில் பலன்கள் கிடைப்பது உறுதி. உங்கள் நேர்மையான முயற்சி மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். பணியில் உங்கள் செயல்திறனின் தரம் மேம்படும்.

உங்கள் அன்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். நீங்கள் இன்றைய நாளை ஒன்றாக இணைந்து கொண்டாடி திருப்தியடைவீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது.




உங்கள் பொறுப்புகளை திறமையாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். பொறுமை காப்பது நல்ல பலனைத் தரும். விரைவாக முடிவெடுக்க முனைவீர்கள். இந்த உணர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். நீங்கள் திறமையான முறையில் பணியாற்ற பணிகளை நன்கு கையாள வேண்டும். முன்கூட்டி திட்டமிட்டால் செயலில் வெற்றி பெறலாம்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். மனம் திறந்த பேச்சும் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலமும் நல்ல பலன்கள் கிடைக்கும்.

இன்று பணம் குறைந்து காணப்படும். குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். பணத்தை சேமிக்க இயலாது.




இன்று சாதகமான நாளாக அமையாது. மனதை ஓய்வாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். வளைந்து கொடுக்கும் அணுகுமுறையும் புத்திசாலித்தனமும் தேவை.

பணியின் போது தவறு செய்ய வாய்ப்புள்ளது. கவனமாகப் பணியாற்றவும்.

உங்கள் துணையுடன் இன்று மோதல்கள் ஏற்படலாம். தேவையற்ற விவாதங்கள் உண்டாக வாய்ப்புள்ளது. அதனை தவிர்த்தல் நலம்.

இன்று பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கையாளும் போது கவனமாக இருக்க வேண்டும்.

இன்று சிறிது பதற்றமாகக் காணப்படுவீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். பிரார்த்தனை மற்றும் மந்திர ஜபங்கள் உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.




இன்று லாபகரமான பலன்கள் கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுக்க உகந்த நாள். நீங்கள் சிறந்த தைரியத்துடன் காணப்படுவீர்கள்.

திறமையாகப் பணியாற்றி அதற்குரிய அங்கீகாரம் பெறுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாகப் பழகுவீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் உல்லாசமாக பழக வேண்டும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். இன்று திடமாகவும் சௌகரியமாகவும் உணர்வீர்கள்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். அனுசரையான போக்கை மேற்கொள்ளுங்கள்.

இன்று பணிகள் கடினமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக அதிக நேரம் பணி செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படாது. உங்கள் துணையுடன் சுமுகமாகப் பழகினால் இந்த நாளை இனிமையாக ஆக்கலாம்.

இன்று பண வரவு காணப்படாது. பணப்பற்றாக்குறை காரணமாக கவலை ஏற்படும்.

கீழே விழுந்து அதனால் பாதங்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று சாதகமான நாள். வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். உங்களின் நம்பிக்கை இன்று பலிக்கும். திட்டமிட்டு செயலாற்றுவது இன்று நல்லது.

பணிகள் இறுக்கமாக காணப்பட்டாலும் குறித்த நேரத்திற்குள் பணிகளை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பராமரிப்பீர்கள். குடும்பத்தில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சியில் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

பணப்புழக்கம் மிகுதியாகக் காணப்படும். ஆக்கபூர்வமான காரியங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் நம்பிக்கை உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். இன்று எடுக்கும் சிறந்த முடிவுகள் வளர்ச்சி பெற உதவும். நீங்கள் உறுதியுடனும் உற்சாகத்துடனும் காணப்படுவீர்கள்.

பணியில் வளர்ச்சி காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையிடம் ஒளிவு மறைவின்றி பேசுவீர்கள். இதனால் உங்கள் துணையிடம் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று பாதுகாப்பாக இருக்க சேமிப்பீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்கள் நேர்மறை எண்ணம் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும்.




இன்றைய நாள் சாதகமான பலன்களை கொடுக்காது. விரும்பியவாறு பலன்களை அடைய சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் வேண்டும். வெற்றியை அடைவதற்கு திட்டமிடல் உதவும்.

உங்கள் துணையுடனான உறவில் சுமுகமான நிலை காணப்படாது. உங்களின் வேறுபட்ட நடவடிக்கைகள் உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் கலந்து காணப்படும். பணப் பரிவர்த்தனைகளுக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள்- 09.05.2026




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. உங்கள் வளர்ச்சி குறித்து கவலைப்படுவீர்கள். என்றாலும் உங்கள் பொறுப்பு மற்றும் அர்ப் பணிப்பு கொண்டு இன்றைய நாளை வெற்றிகரமாக ஆக்குவீர்கள்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. ஆனால் இந்தப் பயணத்தில் சில விரும்பத்தகாத சூழ்நிலைகள் ஏற்படும் என்பதால் இனிமையான பயணமாக இருக்காது.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் பழக வேண்டும். நல்ல உறவை பராமரிக்க சிறந்த அணுகுமுறை தேவை.

வரவும் செலவும் இணைந்து காணப்படுகின்றது.




உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைய கடினமாக உழைக்க வேண்டும். அனைத்தையும் பொறு மையாக கையாள வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணிச்சுமைகள் கவலையை அளிக்கும். சக பணியாளர்களிடம் மோதல்கள் ஏற்படும் வாய்ப்புள்ளதால் கவனமாக உரையாட வேண்டும்.

உங்கள் துணையிடம் நட்பு முறையில் பழகுவீர்கள். இம்மாதிரி அணுகுமுறையால் நீங்கள் நல்ல புரிந்துணர்வை பராமரிக்க முடியும்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள். இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக காணப்படும். கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக்காது. எதையும் லேசாக எடுத் துக் கொள்ளுங்கள். இன்று அமைதி யாகவும் புத்துணர்ச்சியுடனும் இருக்க வேண்டும்.

பணிகளை பொறுமையான அணுகுமுறையோடு மேற்கொள்ள வேண்டும். பணிகள் பரபரப்பாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிடுவது அவசியம்.

நீங்கள் சிறிய விஷயங்களையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். உங்கள் குடும்பத் தேவைகளுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பதற்றமாக காணப்படுவீர்கள். தியானம் மூலம் நீங்கள் அமைதி பெறலாம்.



உங்கள் முயற்சிகளில் வளர்ச்சியும் வெற்றியும் காணப்படும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும் வகை யில் இன்றைய நாள் சுமுகமாக இருக்கும்.

உங்களின் அருமையான செயல்திறன் மூலம் உங்களுக்கு வெகுமதியும் அங்கீகாரமும் கிடைக்கும். உங்களின் புத்திசாலித்தனம் மற்றும் சிறந்த செயல் மூலம் வெற்றிக்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பீர்கள். இதனால் அவருக்கு உங்கள் மீது நம்பிக்கை பெருகும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. இன்று உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று ஆற்றல் மிக்க மன நிலை காணப்படும்.

# தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டத்தில் பங்கேற்காத மீனவர்களுக்கு ரூ. 3,000 அபராதம்

## பருத்தித்துறை நகர் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் சர்ச்சை

(பூ.லின்ரன்)

கடந்த மே முதலாம் திகதி யாழ்ப் பாணத்தில் நடைபெற்ற தேசிய மக் கள் சக்தியின் தொழிலாளர் தின (மே தின) நிகழ்வில் கலந்துகொள்ளாத மீனவர்களுக்குத் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளமை பருத்தித்துறை மீனவர் சமூகத்தில் பெரும் கொந்த ளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை நகர் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களை, தேசிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மே தினக் கூட்டத்தில் கலந்துகொள் ளுமாறு பருத்தித்துறை கொட்டடி மீனவர் சங்கம் அறிவுறுத்தியிருந்தது.

சங்கத்தின் அறிவுறுத்தலை மீறி, குறித்த மே தினக் கூட்டத்திற்கு மீனவ சங்க உறுப்பினர்கள் சுமார் அறுபது பேர் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு கூட் டத்திற்குச் செல்லாத உறுப்பினர்க ளுக்கு தலா 3,000ரூபா தண்டப்பணம் (அபராதம்) செலுத்துமாறு மீனவர் சங்கம் தற்போது உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரம் பருத்தித்துறை மீனவர் மத்தியில் பெரும் அதிருப் தியை ஏற்படுத்தியுள்ளது.

கடல் தொழிலாளர் சங்கங்களை




ஓர் அரசியல் கட்சியின் தேவைக்காகப் பயன்படுத்துவது மற்றும் உறுப்பினர் களைக் கட்டாயப்படுத்தி அரசியல் கூட்டங்களுக்கு அழைத்துச் செல்வது ஜனநாயகத்திற்கு முரணானது என மீனவ சமூகத்தினர் மற்றும் சமூக நலன் விரும்பிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய பொருளாதாரச் சூழலில், அன்றாட வாழ்வாதாரத்திற் காகப் போராடும் மீனவர்கள் மீது இவ்வளவு பெரிய தொகையை அப ராதமாக விதிப்பது அநீதியானது என ஆளும் தரப்பினர் மற்றும் சங்கத் தினர் மீது பலரும் விசனம் தெரிவித் துள்ளனர்.

சுயாதீனமாக இயங்க வேண்டிய கடல் தொழிலாளர் சங்கங்களை தேசிய மக்கள் சக்தியின் சார்புக் கட்டமைப்பாக மாற்றும் முயற்சியா கவே இவ்வாறான செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன என சமூக நலன் விரும்பிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் பருத்தித்துறை மீனவக் கிராமங்களில் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளதுடன், அரசியல் பங்கேற்புக்குக் கட்டாயப்ப டுத்தும் விடயமாக விவாதங்களையும் தோற்றுவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பருத்தித் துறை கொட்டடி மீனவர்கள் சங்க செயலாளரிடம் வினவிய போது அவர் குறிப்பிடுகையில் -

தமது சங்கத்தின் கடந்த ஆண்டு பொதுக்கூட்டத்தில் எடுத்த தீர்மா னத்தின் படி தமது சங்கத்திற்கு கூட் டங்களுக்கு வறுமாறு அழைப்பு விடுவிக்கப்பட்டால் அக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத பட்சத்தில் அவர்க ளுக்கு 3000 ரூபா தண்டப்பணம் அற விடப்படும். அதன் அடிப்படையில் தான் இத்தண்டம் அறவிடப்படுகின்றது - எனத் தெரிவித்துள்ளார்.